1990 மே 11]

(ஈ) சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களைக் கொச்சைப்படுத்தி "ஜூனியர் விகடன்" பத்திரிகை வெளியிட்டுள்ள செய்திகள் குறித்து.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினரான என்னைப் பற்றியும், எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரான குமரி அனந்தன் அவர்களைப் பற்றியும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மூப்பனார் அவர்களைப் பற்றியும் ''ஜூனியர் விகடனில்''—ஒரு வாரப் பத்திரிகையில்—ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தியில் எங்களைப் பற்றி விரசமாக—ரீல் ரெங்கப்பா என்று சொன்னாலும் ஹாஸ்யமாக சொல்லப்பட்ட பகுதி என்றாலும் கூட சற்று விரசமாக—இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டி அதை இங்கே படிக்க தங்களிடம் அனுமதி கோரியிருக்கிறேன். படிக்க அனுமதி வேண்டுகிறேன்.

10-25 மணி

''கரப்பான் பூச்சி, மூட்டை பூச்சி இவை இரண்டையும் நேரில் பார்த்தால் அலறி அடித்துக்கொண்டு ஓடுவார் மூப்பனார். இந்த விஷயம் வாழப்பாடியிடம் குழைந்து கொண்டும், மூப்பனாரிடம் ரகசியமாக வந்து பேசும் குமரி அனந்தன் மூலம் வாழப்பாடிக்குத் தெரிந்தது. உடனே வாழப்பாடி தனது ஆதரவு சட்டமன்ற உறுப்பினர் சிங்காரத்திடம் நன்கு கொழுத்த கரப்பான் பூச்சிகளையும் தாம்பரம்—பீச் மின் வண்டியிருலிந்து விசேஷமாகக் கொண்டு வரப்பட்ட மூட்டைப் பூச்சிகளையும் கொடுத்து அனுப்பியிருக்கிறார். மூப்பனார் சட்டசபைக்கு வரும்போது அவரது இருக்கையில் நாசுக்காக போட்டு மேயவிட்டு மூப்பனாரை அலற வைக்க வேண்டும் என்பது வாழப்பாடியின் திட்டம். இந்த விஷயம் மூப்பனாருக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அதனால் தான் சட்டசபைக்கு வர பயப்படுகிறார். இந்த விஷயத்தை மூப்பனார் ஒப்பனாக வெளியே சொல்ல முடியாத நிலைமையில் சொன்னால் கட்சி விரோத நடவடிக்கை என்று வாழப்பாடி ஏதாவது நோட்டீஸ் அனுப்பி விடுவாரோ என்ற பயம், இப்படி மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவிக்கிறார் மூப்பனார்'' என்ற செய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மூப்பனார் தஞ்சை மாவட்டத்துக்காரர். சிங்காரமாகிய நானும் தஞ்சை மாவட்டத்துக்காரர். தஞ்சை மாவட்டத்திலே பிறந்த வீரம் செறிந்த நாங்களா மூட்டை பூச்சிக்கும் இதற்கும் பயப்பட போகிறோம்? இதே ஹவுசில் இருக்கிறோம். அதே நேரத்தில் எங்களுடைய காங்கிரஸ் துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் இலக்கிய நயத்தோடு எதையும் பேசுவார்.

அதனால் குழைந்து குழைந்து போவது என்பது அர்த்தம் அல்ல. இருவரும் எங்களுடைய தலைவர்கள். சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் மூப்பனார் அவர்களும் எங்களுடைய தலைவர். வாழப்பாடி ராமமூர்த்தியும் எங்களுடைய தலைவர். அதற்காக சற்று அதிகமான முறையில் விரசமாக இருக்கிறது, ஆகவே ஹேஷ்யம் போடவேண்டியதுதான். இதுபோல் 'ரீல் ரெங்கப்பா' என்ற செய்தி வரவேண்டியதுதான். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் சற்று விரசமாக இருக்கிறது. ஆகவே இந்த ஜூனியர் விகடன் பத்திரிகையின் கவனத்திற்கு தயவு செய்து பேரவைத் தலைவர் அவர்கள் கொண்டுபோய் ''ரீல் ரெங்கப்பா இதெல்லாம் சிங்காரத்திடம் சொல்லாதப்பா'' என்று சொல்லி இதற்கு ஒரு நோட்டீஸ் அனுப்பியாவது இதுபோன்ற விரசமான பகுதியை வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவனத்திற்குக் கொண்டு வந்தது பற்றி மகிழ்ச்சி. நம்முடைய இதழ்களுக்கு பொதுவாகவே நகைச்சுவை, கற்பனைச் செய்திகள் வெளியிடுவதற்குச் சில உரிமைகள் இருக்கின்றன, என்றாலும் திரு. சிங்காரம் அவர்கள் மூட்டைப்பூச்சி, கரப்பான் பூச்சியோடு இவ்வளவு தொடர்பு வைத்திருக்கிறார் என்ற அளவிற்கு அது சொல்லப்பட்டிருப்பது அவரை மிகவும் பாதித்து இருப்பதனால் இனிமேல் இதுபோன்ற செய்திகளை உறுப்பினர்களைக் கொச்சைப்படுத்துகின்ற அளவுக்கு, மதிப்பிற்குரிய திரு. மூப்பனார் போன்ற மதிப்பிற்குரிய தலைவரைக் கொச்சைப்படுத்துகின்ற அளவிற்குச் செய்திகளை வெளியிடாமல் வேறு வகையான நல்ல கற்பனைகளை, தரமான கற்பனைகளை வெளியிட்டு, பத்திரிகை உலகம் இந்தத் தமிழ் இனத்திற்கு, மக்களாட்சி மாண்புக்குத் துணை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளோடு இந்தப் பிரச்சினை முடிக்கப்படுகிறது.

3. விதி 109-ன் கீழ் உறுப்பினரின் தன்னிலை விளக்கம்

4–5–1990 ஆம் நாளன்று திரு. குமரி அனந்தன் தெரிவித்த கருத்து பற்றி அறநிலையத்துறை அமைச்சரின் தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 109-ன் கீழ் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு தன்னிலை விளக்கத்தை அளிக்கிறார். (குறுக்கீடு) ஏற்கனவே எல்லா விளக்கமும் சொல்லியாகிவிட்டது. இனிமேல் அதில் விவாதத்திற்கு இடமில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : இரண்டு நாட்களுக்குப் பின்னாலே எடுத்துக்கொள்ளலாம் என்று அன்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். இப்போது